5. மேலே பந்தி (04) இற் குறிப்பிடப்பட்ட முகவரியில் கேள்விகள் திறக்கப்பட்டு உடனடியாக மூடப்படும். கேள்வி ஒப்பந்தகாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் அந்நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

6. கேள்விப் பத்திர ஆவணங்களை புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு10, இலங்கையில் எந்தவிதக் கட்டணமுமின்றி பரிசீலிக்கலாம்.

7.மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்பு கொள்ளவும். புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர், புகையிரதக் களஞ்சிய திணைக்களம், த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10. இலங்கை. தொலைபேசி இலக்கங்கள் : 94 (011) 2432044 அல்லது 94 (011) 2436818, தொலைநகல் : 94 (011) 2432044, மின்னஞ்சல் : srs @sierra.lk

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபை.

கேள்வி இல. எஸ்.ஆர் எஸ்./ எவ். 6457

12-234

இலங்கை புகையிரத சேவைகள்

25,000 மோர்டட் சொலிட் இறப்பர் பாட்களை வழங்குதல்

தலைவர், திணைக்கள கேள்விச் சபையினால் உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து 25,000 மோல்டட் சொலிட் இறப்பர் பாட்களை (MOULDED SOLID RUBBER PADS) இலங்கைப் புகையிரதப் பகுதிகளுக்கு வழங்குவதற்கான கேள்விகள் 25.01.2006 முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

2. மீளப் பெறமுடியாத கேள்விப்பணமாக ரூபா 1,000 ஐ வைப்புச் செய்வதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 இல் 03.01.2006 பிற்பகல் 3.00 மணி வரை பெறப்படும் கேள்விப் பத்திர ஆவணங்களில் கேள்விகள் சமர்ப்பிக்கப்பிடல் வேண்டும்.

3. புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10 இல் 05.01.2006 முற்பகல் 10.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்பட்டு உடனடியாக மூடப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் சமுகமளிக்குமாறு கோரப்படுகின்றனர்.

4. சீலிடப்பட்ட கேள்விகள், பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தலைவர், கேள்விச்சபை, இலங்கை புகையிரத சேவைகள், புகையிரத களஞ்சியத் திணைக்களம். கொழும்பு 10 இல் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம். ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10 இல் கேள்விப்பத்திர ஆவணங்களை எந்தவிதக் கட்டணமுமின்றி பரிசீலனை செய்வதுடன், மேலதிக விபரங்களுக்கு புகையிரத களஞ்சிய அத்தியட்சகருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 2432044 அல்லது 2436818.

தலைவர்,
கேள்விச்சபை,
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. : எஸ். ஆர். எஸ்./எவ் 6486.

12-373

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரச பொகுனுவிட ஹேநேகம சுமுது இல்லத்தில் வசிக்கும் ஹெட்டியாராச்சிகே மாலக நந்தன பெரேரா ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு ஜெ. ஏ. செனாரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாம் திகதி 621ஆம் இலக்க அட்டோணி தத்துவத்தின் மூலம் பொகுனுவிட ஹேநேகம சுமுது இல்லத்தில் வசிக்கும் ஹெட்டியாரச்சிகே சாலியதாச பெரேரா என்பவருக்கு கொடுக்கப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை இரத்து செய்து முடித்துக்கொள்வதை அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

இதற்கு பிறகு மேலே குறிப்பிட்ட அட்டோர்ணி தத்துவக்காரர் எனக்காக கைச்சாத்திடும் எந்தவித ஆவணங்களுக்கும் உறுதிகளுக்கும் நான் பொறுப்பு இல்லை என்பதனை மேலும் அறியத்தருகிறேன்.

ஹெட்டியாராச்சிகே மாலக நந்தன பெரேரா,

12-257

அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 84/2, பெப்டிஸ் மாவத்தை, பெத்தகான பிட்டகோட்டேயில் வசிக்கும் கோவெல வித்தானகே கருணாவதீ ஆகிய என்னால் 2000.12.08 ஆந் திகதி பகிரங்க நொத்தாரிசு எல். ஏ. பதிரவித்தானவினால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 535 எனும் அட்டோர்ணி தத்துவத்தின் கீழ் புத்திசாரனீ சிரோமா வித்தானகேவிற்கு வழங்கப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்வதாகவும் 2005, நவெம்பர் 16 ஆந் திகதி அவரிடம் பொறுப்பளிக்கப்பட்டிருந்த அட்டோர்ணி தத்துவத்தின் கீழ் மேற்கண்டவரினால் மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களும் செல்லுபடியாகாது எனவும் பொறுப்பு கூறப்பட மாட்டாது எனவும் இரத்துச் செய்வதாகவும் சகல இலங்கை பிரஜைகளுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவெல வித்தானகே கருணாதீ.

12-347